Aaruthal

# எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான
## விசேட இடர்கால செயற்றிட்டம் - 2021
## மாதிரி வினாத்தாள் – I

06.10.2021

**வரலாறு -I** | ஒரு மணித்தியாலம்

**கவனிக்க :**

i. **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக. இவ்வினாத்தாளுக்கு **80** புள்ளிகள் வழங்கப்படும்.

ii. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.

iii. **உமக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்தவட்டத்தினுள்ளே புள்ளடியை (✕) இடுக.**

iv. அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

1. இலங்கையின் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்களில் கி. பி. 4 ஆம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட மிகப் பழமையான நூல் எது?
   (1) தீபவம்சம் (2) மகாவம்சம் (3) சூளவம்சம் (4) தாதுவம்சம்

2. இலங்கையின் பௌத்த சாசன வளர்ச்சி பற்றி எழுதப்பட்டுள்ள நூல்
   (1) பூஜாவலிய (2) சத்தர்மாலங்கார
   (3) நிகாயசங்கிரஹய (4) ராஜாவலிய

3. ரோம இனத்தவரான குளோடியஸ் தொலமி என்ற புவியியலாளரால் வரையப்பட்ட உலகப்படத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்ட பெயர்
   (1) இரத்தினதுபீபம் (2) செரண்டிப்
   (3) செய்லோன் (4) தப்ரபேன்

4. கீர்த்தி ஸ்ரீ நிசங்கமல்ல மன்னனால் பொறிக்கப்பட்ட இலங்கையின் மிக நீண்ட கல்வெட்டு
   (1) தோணிகல கல்வெட்டு (2) கல்பொத்த கல்வெட்டு
   (3) பதுளை தூண் கல்வெட்டு (4) கொடவாய கல்வெட்டு

5. கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட குதிரைத் தலையும் மனிதனும் என்ற செதுக்கல் காணப்படும் விகாரை எது?
   (1) இசுறுமுனிய விகாரை (2) கிரி விகாரை
   (4) எம்பக்கதேவாலயம் (4) ஜேத்தவனராமய

6. இலங்கையின் கற்கால மனிதன் வாழ்ந்த சுற்றாடல் வலயங்களைத் தீர்மானித்த பிரதான காரணி

(1) தாவரங்கள் (2) விலங்குகள் (3) மழைவீழ்ச்சி (4) தரைத்தோற்றம்

7. இலங்கையின் மத்திய கற்காலத்திற்குரிய கேத்திரகணித உருவிலான ஆயுதங்கள் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது
(1) மரங்கள் (2) படிகப்பாறை
(3) செம்மஞ்சள் நிறக்கல் (4) சிவப்புக் கல்

8. இலங்கையின் புராதனகால மக்கள் வாழ்ந்த காலநிலை வலயங்கள் நிரல் I இலும் நிரல் II இல் வெட்டவெளிகள், குகைகள் காணப்பட்ட இடங்களும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைத் தொடர்புபடுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| **நிரல் I** | **நிரல் II** |
|---|---|
| 1) கரையோரம் | A - பட்டதொம்பலென |
| 2) தாழ்நில ஈர வலயம் | B - சிகிரியாஅலிகல |
| 3) தாழ்நில உலர் வலயம் | C - பதிராஜவெல |
| | D - பெல்லன்பதிபெலஸ்ஸ |

(1) CAB (2) CBA (3) ACB (4) DCA

9. இலங்கையில் 12500 வருடங்களுக்கு முன்னர் காட்டுப் பலாவின் விதைகள் தீயில் சுட்டு சாப்பிட்டமைக்கான ஆதாரம் கிடைக்கப்பெற்ற குகை
(1) பாகியன்கல (2) சிகிரியா அலிகல
(3) குருவிட்டபட்டதொம்பலென (4) கித்துள்கலபெலிலென

10. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் விவசாயிகள் வாழ்ந்த கிராமங்களுக்கு வழங்கப்பட்ட பெயர்
(1) மணிகாரகாம (2) கசீகாரகாம (3) கோபாலகாம (4) கும்பகாரகாம

11. கி. மு. 900 ஆண்டளவில் இலங்கையின் கிராமியக் குடியிருப்புக்கள் பரந்திருந்த காலநிலை வலயம்
(1) தாழ்நில ஈரவலயம் (2) கரையோரம்
(3) தாழ்நில உலர் வலயம் (4) உயர்நில ஈரவலயம்

12. புராதன இலங்கையில் காணப்பட்ட குளத்தொகுதிகளுக்கு உலர் வலயமக்கள் வழங்கிய பெயர்
(1) வெவ்பிரபாதனய (2) எல்லங்காவ
(3) கிராமக் குளங்கள் (4) பெருங் குளங்கள்

13. ஆட்சியின் மத்திய நிலையமாக அநுராதபுரத்தைத் தெரிவு செய்து அதனைத் தலைநகரமாக்கிய மன்னன் யார்?
(1) தேவநம்பியதீசன் (2) துட்டகைமுனு

(3) வசபன் (4) பண்டுகாபயன்

14. இலக்கிய மூலாதாரங்களின் படி இலங்கைத் தீவை ஒன்றுபடுத்திய முதல் மன்னன்
(1) வசபன் (2) மகாசேனன்
(3) துட்டகைமுனு (4) தேவநம்பியதீசன்

15. கி. பி. 9 அம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில் வழங்கப்பட்ட கொடுப்பனவின் தூய்மையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட குறியீடு
(1) விசிறி (2) அன்னம் (3) காகம் (4) நாய்

16. அநுராதபுரம் இலங்கையின் தலைநகரமாக இருந்த போது அரசுரிமை வழங்கப்பட்ட பிரதான முறை யாது?
(1) தந்தை வழி முறை (2) தாய் வழி முறை
(3) தாய் மாமன் வழி முறை (4) சகோதரி வழிமுறை

17. குளத்தில் அலைகளினால் ஏற்படும் அழுத்தத்தினால் அணைக்கட்டு அரிக்கப்படுவதனைத் தடுப்பதற்காக அமைக்கக்கப்பட்ட உறுப்பு
(1) கலிங்கல் (2) கலிங்கல் தொட்டி
(3) சுருங்கை (4) அலைதாங்கி

18. இடி, மின்னலில் இருந்து பாதுகாக்கின்ற வஜ்ரசும்பட்ட என்ற உபகரணம் முதன்முதல் பொருத்தப்பட்ட விகாரை எது?
(1) அபயகிரிவிகாரை (2) ரூவன்வெலிசாய
(3) கிரிவிகாரை (4) இசுறுமுனியவிகாரை

19. இலங்கையில் கி. பி. 5 ஆம் நூற்றாண்டில் கட்டியெழுப்பப்பட்ட சிறந்த நகரம்
(1) அநுராதபுரம் (2) சிகிரியா
(3) பொலன்னறுவை (4) தம்பதெனியா

20. வெளிநாடுகளில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்தவர்களிடம் அறவிடப்பட்ட வரி
(1) சுங்கவரி (2) தக்கபதி
(3) போஜக்கபதி (4) எண்ணெய்வரி

21. சோழரிடமிருந்து நாட்டை மீட்டெடுத்து பொலன்னறுவையைத் தலைநகராக்கிய மன்னன் யார்?
(1) முதலாம் பராக்கிரமபாகு (2) நிசங்கமல்லன்
(3) முதலாம் விஜயபாகு (4) இரண்டாம் விஜயபாகு

22. கண்டி இராசதானியில் நிலம் பாகுபடுத்தப்பட்ட முறை நிரல் I இலும், நிரல் II இல் அவற்றின் பயன்பாடும் தரப்பட்டுள்ளன. நிரல் I இற்கு ஏற்ப நிரல் II இனைத் தொடர்புபடுத்தி சரியான விடையைத் தெரிவு செய்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1) கபாடகம் | A - தேவாலயங்களுக்கு வழங்கப்பட்டது |
| 2) நிந்தகம் | B - கிராமத்தவர் பரம்பரையாக அனுபவித்த நிலம் |
| 3) தேவாலகம் | C - அரசமாளிகையின் பயன்பாடு |
| 4) பரவேனிகம் | D - பிரதானிகளின் சேவைக்கு வழங்கப்பட்டது |

(1) CDAB (2) BADC (3) CBAD (4) CADB

23. கி. பி. 1453 ஆம் ஆண்டு இஸ்லாமியரான துருக்கியரால் கைப்பற்றப்பட்ட நகரம்
(1) ரோம் (2) புளோரன்ஸ்
(3) கொன்ஸ்தாந்திநோபிள் (4) வெனிஸ்

24. நாடுகாண் பயணத்தில் அதிக ஆர்வம் கொண்டிருந்த போர்த்துக்கல் நாட்டின் ஆட்சியாளர்
(1) இஸபெலா இளவளரசி (2) இரண்டாம் ஹென்றி
(3) நான்காம் ஹென்றி (4) பேர்டினனட்

25. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தந்த போது யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னன் யார்?
(1) சங்கிலியன் (2) விஜயகூழங்கை (3) வரோதயன் (4) பரராசசேகரம்

26. 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் கைத்தொழில் புரட்சி முதன் முதல் ஏற்பட்ட ஐரோப்பிய நாடு
(1) பிரான்ஸ் (2) ஜேர்மனி (3) பிரித்தானியா (4) போர்த்துக்கல்

27. ஆகாயவிமானத்தைக் கண்டறிந்தவர்கள்
(1) ரைட்சகோதரர்கள் (2) அலெக்சாண்டர் கிரகம்பெல்
(3) குக்லி மார்க்கோனி (4) ஜோன்லொகி பெயாட்

28. ஐரோப்பிய சந்தையில் அதிக கேள்வி நிலவிய இலங்கையின் வாசனைப் பொருள்
(1) மிளகு (2) ஏலம் (3) கராம்பு (4) கறுவா

29. இலங்கையின் இறுதிச் சுதந்திர அரசு எது?
(1) யாழ்ப்பாணம் (2) கோட்டை (3) கண்டி (4) சீதாவாக்கை

❖ **கீழே A, B எனத் தரப்பட்ட கூற்றுக்களை அவதானித்து 30, 31 ஆகிய வினாக்களுக்கு விடைதருக.**

**A - மடிகே முகாந்திரம் பதவிக்கு ஹஜ்ஜி மரிக்கார் நியமிக்கப்பட்டமை**

**B - ஆளுநர் டொரிங்டனால் விதிக்கப்பட்ட வரிகள்**

30. இலங்கையில் 1818 ஆம் ஆண்டு இடம் பெற்ற முதலாவது சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய கூற்று
   (1) A சரியானது B தவறானது
   (2) A யும் B யும் சரியானது
   (3) A தவறானது B சரியானது
   (4) A யும் B யும் தவறானது

31. 1848 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற இரண்டாவது சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய கூற்று
   (1) A யும் B யும் சரியானது
   (2) A யும் B யும் தவறானது
   (3) A தவறானது B சரியானது
   (4) A சரியானது B தவறானது

32. இந்துமத கலாசார மறுமலர்ச்சி இயக்கத்திற்குத் தலைமை தாங்கியவர்
   (1) சேர் பொன் அருணாசலம்
   (2) சேர் பொன் இராமநாதன்
   (3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்
   (4) நடேசு ஐயர்

33. இலங்கையில் சேமிப்பு வங்கி ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட அரசியல் யாப்பு சீர்திருத்தம் எது?
   (1) டொனமூர் அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (2) சோல்பெரி அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (3) மனிங் அரசியல் யாப்பு சீர்திருத்தம்
   (4) கோல்புறூக் அரசியல் யாப்பு சீர்திருத்தம்

34. 1972 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதி பதவி வகித்தவர்
   (1) வில்லியம் கோபல்லவா
   (2) சேர்.பொன் அருணாசலம்
   (3) R. பிரேமதாச
   (4) S. W. R. D பண்டாரநாயக்கா

35. இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் படி பாராளுமன்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கை

(1) 29 (2) 196 (3) 225 (4) 250

36. வடஅமெரிக்காவில் இறுதியாக உருவாகிய குடியேற்றம் எது?

(1) டெலவர் (2) ஜோர்ஜியா

(3) வேர்ஜினியா (4) பென்சில்வேனியா

37. பிரான்சியப் புரட்சியின் போது பிரான்சை ஆட்சிசெய்த அரசவம்சம்

(1) பூர்போன் அரசவம்சம் (2) சார் அரசவம்சம்

(3) நிக்கோட் அரசவம்சம் (4) யூலியஸ் அரசவம்சம்

38. உலகில் தோற்றம் பெற்ற சமவுடமை அணிக்குத் தலைமை தாங்கிய நாடு

(1) சீனா (2) கியூபா (3) வியட்னாம் (4) ரஷ்யா

39. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மன் மொழிபேசிய 350 சிறிய நாடுகளை ஒன்றிணைத்து ஐக்கிய ஜேர்மனியை உருவாக்கியவர்

(1) ஓட்டோவொன் பிஸ்மார்க்

(2) இரண்டாம் வில்லியம்

(3) பிரான்சிஸ் பேர்டினன்ட்

(4) அடோல்ப் ஹிட்லர்

40. ஐக்கியநாடுகள் சபையில் வீட்டோ எனப்படும் இரத்துச் செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ள நாடுகளின் எண்ணிக்கை

(1) 10 (2) 8 (3) 5 (4) 3

(40 × 2 = 80புள்ளிகள்)

Aaruthal

**எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப்**
**பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான**
**விசேட இடர்காலசெயற்றிட்டம் - 2021**
**மாதிரிவினாத்தாள் – I**

**06.10.2021**

**வரலாறு -II** **மூன்று மணித்தியாலம்**

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**கவனிக்க :**

- **பகுதி I** இல் வினா இலக்கம் 1 கட்டாயமானது
- **பகுதி II** இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி **III** இலிருந்து **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி- I

1. (அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

| | | | |
|---|---|---|---|
| கலாஓயா, | கல்ஓயா, | கண்டி, | உராந்தோட்டை, |
| இரணைமடுக்குளம், | மின்னேரியாவாவி, | மகாகமம், | கதிர்காமம், |
| நீர்கொழும்பு, | சிலாபம், | சிகிரியா, | கோகன்ன |

*(12 புள்ளிகள்)*

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள பகுதி உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| உரோம், | லிஸ்பன், | சுயெஸ் கால்வாய், |
| சுமாத்திரா, | கோவா, | கொல்கத்தா |

*(06 புள்ளிகள்)*

(ஆ) (i) கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - மின்னேரித் தெய்வம் எனப் போற்றப்பட்ட இலங்கையின் ஆட்சியாளன்

B - ஆசிய நாடொன்றில் போர்த்துக்கேயர் படுதோல்வி அடையக் காரணமாக இருந்த முல்லேரியாப் போரில் சீதாவாக்கை இராசதானியின் படைகளுக்குத் தலைமை தாங்கியவன்

C - நாடுகாண் பயணத்தில் ஈடுபட்ட கிறிஸ்டோபர் கொலம்பஸிற்கு ஆதரவு வழங்கிய ஸ்பானிய மன்னன்

D - கி. பி. 1961 இல் அணிசேரா நாடுகள் அமையம் உருவாகக் காரணமாக இருந்த இந்தியப் பிரதமர் *(04 புள்ளிகள்)*

- **A, B எனக் குறிப்பிடப்பட்டுள்ள ஒளிப்படங்களை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க இழுங்கு முறைப்படி உங்கள் விடைத் தாளில் எழுதுக.**

**A**



(ii) 1. **A** இனால் காட்டப்பட்டுள்ள விகாரையைப் பெயரிடுக.
2. மேற்படி விகாரையைக் கட்டியமன்னன் யார்?
3. இவ்விகாரை காணப்படும் இலங்கையின் வரலாற்று நகரம் எது?
4. இவ்விகாரையின் சிறப்பு யாது? *(04 புள்ளிகள்)*

**B**



(iii) 1. **B** இனால் காட்டப்பட்ட மன்னனின் பெயர் யாது?
2. மேற்படி மன்னன் ஆட்சி செய்த இராச்சியம் எது?
3. இவ் மன்னனின் அரசவம்சம் யாது?
4. இம் மன்னனின் இயற் பெயர் என்ன?

*(04 புள்ளிகள்)*

## பகுதி- II

2. (i) இலங்கைக்கு வருகை தந்து தமது அனுபவங்களை நூல்களாக எழுதிய மூவரின் பெயர்கள் கீழே A, B, C எனத் தரப்பட்டுள்ளது. அவர்களின் தாய் நாடுகளை அதே ஒழுங்கில் உங்கள் விடைத்தாளில் எழுதுக. *(03 புள்ளிகள்)*

A - பாகியன்தேரர்

B - இபன்பதூதா

C - றொபட் நொக்ஸ்

(ii) பின்வரும் A தொடக்கம் D வரை தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்களுக்கும் பொருத்தமான விடைகளைத் தருக. *(04 புள்ளிகள்)*

A - இலங்கையில் மத்தியகாலத்தில் பயன்படுத்தப்பட்ட தங்க நாணயத்தின் பெயர்

B - முதலாம் விஜயபாகு மன்னனுக்கு உதவி செய்த அதிகாரியின் பெயர்

C - பண்டைய இலங்கைப் பெண்களின் ஆடை, ஆபரணங்கள், அலங்காரக் கலை நுட்பங்கள் பற்றி அறிவதற்கான சான்றாதாரம்

D - மரத்தூண்களில் எழுதப்பட்டுள்ள எழுத்துக்களுக்கான சான்றாதாரம்

(iii) கல்வெட்டுக்கள் மூலம் அறிந்துகொள்ளக் கூடிய இரண்டு விடயங்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) வரலாற்றினைக் கற்பதன் மூலம் பெற்றுக் கொள்ளும் மூன்று பயன்களை விளக்குக.

*(06 புள்ளிகள்)*

3. (i) இலங்கையின் புராதன காலத்தில்

A - தாழ்நில ஈரவலயத்தில் வாழ்ந்த மக்களின் பிரதான உணவு

B - தாழ்நில உலர்வலயத்தில் உணவிற்காக வேட்டையாடிய விலங்குகள் இரண்டு என்பவற்றைத் தருக. *(03புள்ளிகள்)*

(ii) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கள் வாழ்வதற்கு விரும்பிய இடங்களின் பண்புகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

(iii) முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட இரண்டு மாற்றங்களை உதாரணங்களுடன் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) வரலாற்றுக்கு முற்பட்டகால மரணச் சடங்கு முறைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*

4. (i) கீழே A,B,C எனத் தரப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக. *(03 புள்ளிகள்)*

A - ஆட்சியின் பத்தாவது வருடத்தில் கிராமங்களுக்கு எல்லைகள் வகுத்தல்

B - குபேரக் கடவுளாகக் கருதிக் கொண்ட மன்னன்

C - விகாரையின் கட்டட நிர்மாணத்தில் ஈடுபட்டவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்த மன்னன்

(ii) கீழே A, B, C, D எனத் தரப்பட்ட கடமைகளை நிறைவேற்றிய அரச அதிகாரிகளின் பெயர்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

A - நகரத்தினைப் பரிபாலித்தவர்

B - படைகளுக்குத் தலைமை தாங்கியவர்

C - உணவுச் சாலையின் அதிகாரி

D - காசு அச்சிடும் பிரிவின் தலைவர்

(iii) நாட்டினை ஆட்சி செய்த மன்னர்களின் இரண்டு கடமைகளை விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) கமிகவின் பணிகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*

5. (i) இலங்கையின் மேற்கே அமைந்திருந்த பழைய துறைமுகங்கள் மூன்று தருக. *(03 புள்ளிகள்)*

(ii) இலங்கையின் புராதன வைத்தியத் துறைக்குப் பங்களிப்புச் செய்த நான்கு மன்னர்களின் பெயர்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் உள்நாட்டு வர்த்தகம் தொடர்பாக சொரபொரவாவித் தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இரண்டினை விளக்குக.*(05 புள்ளிகள்)*

(iv) 1. A - பாரிய நீர்ப்பரப்பினைத் தாங்குதல்

B - குளத்தில் இருந்து நீர் வெளியேற்றும் போது ஏற்படும் அமுக்கத்தைத் தவிர்த்தல்

என்பவற்றுடன் தொடர்புடைய குளத்தின் உறுப்புக்களைப் பெயரிடுக.

2. B யின் பயன்களைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

6. (i) கண்டி இராச்சியத்தை ஆட்சிசெய்த நாயக்க வம்ச மன்னர்கள் மூவரின் பெயரைத் தருக. *(03 புள்ளிகள்)*

(ii) இரண்டாம் நகரமயமாக்கல் கால இராசதானிகள் நான்கின் பெயர்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் எதிர்கொண்ட இரண்டு சவால்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) இரண்டாம் நகரமயமாக்கல் கால பொருளாதார நடவடிக்கைகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*

7. (i) கீழே A, B, C எனத் தரப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய பிரித்தானிய ஆளுநர்களின் பெயர்களைத் தருக. *(03 புள்ளிகள்)*

A - முதலாவது ஆளுநர்

B - *1815* ஆம் ஆண்டில் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்ட போது பதவி வகித்த ஆளுநர்

C - *1848* இல் ஏற்பட்ட கிளர்ச்சிக்குக் காரணமான புதியவரி விதிப்புடன் தொடர்புடைய ஆளுநர்

(ii) *1818* முதலாவது சுதந்திரப் போராட்டத்திற்கான காரணங்கள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

(iii) கோல்புறுாக் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் இரண்டு விடயங்களை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டதற்கான மூன்று நோக்கங்களை விளக்குக. *(06 புள்ளிகள்)*

## பகுதி- III

8. (i) பிரித்தானியாவில் முதன்முதலாக கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட மூன்று துறைகளையும் தருக. *(03 புள்ளிகள்)*

(ii) A - மியூல் இயந்திரம்

B - பாதுகாப்புவிளக்கு

C - வானொலி

D - புகையிரத எஞ்சின்

போன்றவற்றைக் கண்டுபிடித்த அறிஞர்களின் பெயர்களைத் தருக. *(04 புள்ளிகள்)*

(iii) கைத்தொழிற்புரட்சி

A - விவசாயத் துறையில் ஏற்படுத்திய மாற்றங்கள் மூன்று

B - உலகம் முழுவதும் பரவுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டு என்பவற்றைத் தருக. *(05 புள்ளிகள்)*

(iv) கைத்தொழில் புரட்சியினால் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் மூன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

9. (i) முதலாம், இரண்டாம் உலகயுத்தத்திற்கான உடனடிக் காரணங்களைத் தருக.
(03 புள்ளிகள்)

(ii) இரண்டாம் உலகயுத்தத்தில் ஈடுபட்ட நேசஅணி நாடுகள் நான்கு தருக.
(04 புள்ளிகள்)

(iii) முதலாம் உலகயுத்த முடிவில் ஜேர்மனிக்கு வழங்கப்பட்ட தண்டனைகள் இரண்டினை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) இரண்டாம் உலகயுத்தத்தின் பின் உலகில் ஏற்பட்ட மூன்று மாற்றங்களை விளக்குக.
(06 புள்ளிகள்)


N


N
අප්‍රිකාව
ஆபிரிக்கா
Africa
ඉන්දියන් සාගරය
இந்து சமுத்திரம்
Indian Ocean